| | | |
|---|---|---|
| சாட்சி : PW 2<br>பழனிசாமி | அ.வ.எண். 316/2020 | 14.06.2024 |

குறுக்கு விசாரணை

1) எனது பிரமாண வாக்குமூலத்திற்கு விபரம் சொன்னது நான் தான் என்றால் சரிதான். எனக்கு சாட்சியம் அளிக்க நீதிமன்றத்தில் இருந்து அழைப்பாணை வந்ததா அல்லது வாதி என்னை அழைத்தாரா என்றால் வாதி தான் என்னை அழைத்தார். எனது பிரமாண வாக்குமூலத்தில் பத்தி 1ல் நான் பூர்வீகமாக குடியிருப்பது தாப்பாய் கிராமம் என்று குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். எனது பிரமாண வாக்குமூலத்தில் 5வது பத்தியில் தாவா சொத்தின் நான்கெல்லை விபரம் குறிப்பிட்டுள்ளேன் அதன் காரணமாக தாவா சொத்தின் விபரங்கள் அனைத்தும் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வாதி எனது மாமனார் என்றால் சரிதான். எனது மாமனார் 2004ல் கிரையம் பெற்றதாக எனது பிரமாண வாக்குமூலம் 4 பத்தியில் குறிப்பிட்டுள்ளேன் என்றால் சரிதான். மேற்படி ஆவணத்தில் நான் சாட்சி கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ஆவணம் கிரையம் செய்யும் போது அதன் சர்வே எண் ஆகியவற்றை பார்த்து தான் சாட்சி கையொப்பம் செய்தேன் என்றால் சர்வே எண் பார்க்கவில்லை, ஆனால் நான்கெல்லை தான் தெரியும். தாவா சொத்தின் விஸ்தீரணம் என்னவென்றால் தென்வடல் 14 அடி, கிழமேல் 28 அடி ஆகும். வா.சா.ஆ.1 ஆவணத்தின் படி தாவா சொத்து எங்கு உள்ளது என்ற விபரம் எனக்கு தெரியுமா என்றால் தெரியும். வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்ட சொத்தும், தாவா சொத்தும் வெவ்வேறான சொத்துக்கள் என்றால் சரியல்ல. தாவா சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டிருந்தது என்றால் சுப்ரமணியன் என்பவருக்கு பாத்தியப்பட்டிருந்தது.

2) மேற்படி சுப்ரமணியன் என்பவருக்கு தாவா சொத்து பாத்தியப்பட்டது என்பதற்கு ஆதரவாக நானோ வாதியோ ஏதேனும் ஆவணம் பார்த்தோமா என்றால் இல்லை. மேற்படி சுப்ரமணியனுக்கு ஒரு சகோதரர் இருக்கிறாரா என்றால் இருக்கிறார். தாவா சொத்து சுப்ரமணியனுக்கு பூர்வீக சொத்து என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. தாவா சொத்து சுப்ரமணியனுக்கு மட்டும் தனிப்பட்ட முறையில் பாத்தியப்பட்டது அல்ல என்றால் சரியல்ல. மேற்படி சுப்ரமணியனின் தகப்பனார் பொன்னுசாமி மற்றும் அவரது சகோதரர் ஆகியோருக்கு இடையே அவர்களது குடும்ப சொத்துக்கள் பாகப்பிரிவினை ஏற்படவில்லை என்றாலும் அதன் காரணமாக தாவா சொத்து சுப்ரமணியனுக்கு பூர்வீக சொத்து என்றால் சரியல்ல. எந்த தேதியில் 3ம் பிரதிவாதி காலியிடத்தில் செப்டிக் டேங் கட்டியுள்ளார் என்றால் தேதி தெரியாது, வருடம் 2020 ஆகும். வாதி கிரையம் பெற்றுள்ள சொத்து தவறான சொத்து என்றால் சரியல்ல. தவறான சொத்திற்கு எனது மாமனாரும் உரிமையே இல்லாத நபரிடம் இருந்து கிரையம் பெற்றது செல்லத்தக்கதல்ல என்றால் சரியல்ல. நான் எனது மாமனாருக்காக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வா.சா.ஆ.1 ஆவணத்தில் கண்டுள்ள சர்வே எண் மற்றும் விஸ்தீரணம் படியும் தாவா சொத்திற்கு வா.சா.ஆ.1 ஆவணத்திற்கும் எந்த சம்மந்தமும் இல்லை என்றால் சரியல்ல.